செய்தி வெளியீடு நாள் : **11.1.2025**

கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் திரு. வி. க. நகர் பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மேலும் துரிதப்படுத்த பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

•••••••••

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (11.1.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, மண்டலம்-6, வார்டு-67, சென்னை, மாதவரம் நெடுஞ்சாலை, ஜமாலியாவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.20.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தரைத்தளம் மற்றும் 5 தளங்களுடன் கூடிய புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், பேப்பர் மில்ஸ் சாலை, ராஜா தோட்டத்தில் ரூ.27.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஸ்டில்ட் மற்றும் 9 தளங்களுடன் கூடிய புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மேலும் பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் திரு. வி. க. நகர் பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை மேலும் துரிதப்படுத்த பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் திரு.ப.கணேசன், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.கே.ஜே.பிரவின் குமார், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர் திரு.லால்பகதூர், கண்காணிப்புப் பொறியாளர் திரு.இளம்பரிதி, மண்டல அலுவலர் திரு.ஏ.எஸ்.முருகன், செயற்பொறியாளர் திரு.செந்தில்நாதன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி, திருமதி.ஸ்ரீதேவி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™